# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

| | | |
|---|---|---|
| பிரிவு | : | TNPSC Group I தேர்வு |
| பாடம் | : | இந்திய அரசியலமைப்பு |
| பகுதி | : | **இந்திய அரசியலமைப்பு** |

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - I முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# இந்திய அரசியலமைப்பு

## அரசியலமைப்பு

- ❖ அரசியலமைப்பு என்பது ஒரு நாட்டு மக்களை ஆட்சிபுரியும் அடிப்படை -யான அரசியல் முறையைக் கூறுவதாகும்.
- ❖ அரசின் தலையாய அங்கங்களாகிய சட்டமியற்றும் சபை, நிர்வாகம், நீதித்துறை ஆகியவற்றைத் தோற்று -வித்து, அவற்றின் அதிகாரங்களை வரையறுத்து, பொறுப்புகளைப் பகுத்து, அவற்றுடன் மக்களுக்கும் உள்ள உறவுகளை நெறிப்படுத்துவதே அரசியலமைப்பு ஆகும்.

இந்திய அரசியலமைப்பு உலகிலேயே மிக நீளமான எழுதப்பட்ட அரசியலமைப்பு ஆகும். அரசியலமைப்பு நடைமுறைப் -படுத்தப்பட்ட பொழுது 395 பிரிவுகள், 22 பிரிவுகள், 12 அட்டவணைகள் இருந்தன. தற்பொழுது 465 பிரிவுகள் 25 பகுதிகள், 12 அட்டவணைகள் உள்ளன. இந்நீண்ட அரசியலமைப்பிற்கான முக்கிய காரணங்கள்:

- ❖ நாட்டின் பரந்த புவியமைப்பு
- ❖ காலணியாதிக்க சட்டங்கள் மற்றும் அரசியலமைப்பின் வளர்ச்சி ஆகிய -வற்றால் ஏற்பட்ட அழுத்தம் போன்ற வரலாற்றுக் காரணிகள்
- ❖ ஜம்மு மற்றும் காஷ்மீர் தவிர நாடு முழுவதற்கும் ஒரே அரசியலமைப்பு
- ❖ அரசியலமைப்பு நிர்ணயசபையில் இடம்பெற்ற சட்ட வல்லுநர்களின் ஆதிக்கம்.

## இந்திய அரசியலமைப்பின் சட்டவளர்ச்சி

- ❖ நமது அரசியலமைப்பின் பல்வேறு சிறப்பியல்புகள் ஆங்கிலேய ஆட்சி -யின் தாக்கத்தைக் கொண்டுள்ளது. ஆங்கிலேயர்களால் ஏற்படுத்தப்பட்ட காலணி ஆதிக்கச் சட்டங்கள் நமது அரசியலுக்கும், அரசியலமைப்புக்கும் தூண்டுதலாக உள்ளன. அவை.

**I. வணிகக்குழுவின் கீழ் சட்ட வளர்ச்சி**

**ஒழுங்கு முறைச் சட்டம் (1773) :**

- ❖ இங்கிலாந்து பிரதமர் **"நார்த் பிரபு"** வணிகக்குழுவின் விவகாரங்களை விசாரிக்க தேர்வுக் குழுவை நியமித்தார்.
- ❖ இந்திய அரசியலமைப்பு வரலாற்றில் 1773 ஒழுங்கு முறைச்சட்டம் மிக முக்கியமானது.

**அரசியல் அறிவியலின் தந்தை - அரிஸ்டாட்டில்**

- ❖ ஏனெனில் இந்தியாவில் கம்பெனி நிர்வாகத்தின் மீது பிரிட்டிஷ் நாடாளுமன்றம் தனது கட்டுப்பாடு-களைக் கொண்டு வருவதற்கான முதல் முயற்சியாக அச்சட்டம் அமைந்தது.
- ❖ இச்சட்டம் முதன் முறையாக, கம்பெனி ஆட்சிக்காக எழுதப்பட்ட அரசியலமைப்பு ஒன்றை வழங்கியது. கம்பெனி அரசியல் மற்றும் நிர்வாகப் பொறுப்புகளை அங்கீகரித்தது.

1. வங்காளம், மும்பை, சென்னை ஆகிய மாகாணங்களின் நிர்வாக அமைப்பினை ஒரே அதிகார அமைப்பின்கீழ் கொண்டுவரச் செய்தது.
2. வங்காள ஆளுநரை மேற்கண்ட மூன்று மாகாணங்களுக்கும் தலைமை ஆளுநராக நியமித்தது. முதல் ஆளுநர் - வாரன் ஹேஸ்டிங்ஸ்.
3. தலைமை ஆளுநருக்கு உதவி புரிய நான்கு பேர் கொண்ட ஆலோசனைக்குழு ஏற்படுத்தப்பட்டது.
4. கல்கத்தாவில் ஒரு தலைமை நீதிமன்றம் அமைக்கப்பட்டது. (1774)
5. (1- தலைமை நீதிபதியும் 3 - துணை நீதிபதிகளும் இருப்பார்)
6. ஊழியர்களின் தனியார் வியாபாரம் தடை செய்யப்பட்டது.

**பிட் இந்தியச் சட்டம் (1784) (ஆகஸ்டில்):**

- ❖ 1773-ல் உள்ள நடைமுறை சிக்கல்களை களைய பிட் இந்தியச் சட்டம் உருவாக்கப்பட்டது.

1. கம்பெனியின் வணிகக்குழுவுக்கு இயக்குநர் பொறுப்பு மட்டுமே அளிக்கப்பட்டது.
2. அரசியல் விவகாரங்களைக் கவனிப்பதற்காக ஆறு உறுப்பினர்கள் கொண்ட **"கட்டுப்பாட்டு வாரியம்"** அமைக்கப்பட்டது. இங்கிலாந்து அரசரால் நியமிக்கப்பட்டனர்.
3. இந்திய நிர்வாகம் தொடர்பான அலுவல்களைக் கவனிக்க இங்கிலாந்தில் தனித்துறை அமைக்கப்பட்டது.

**சாசனச் சட்டம் (1813):**

- ❖ ஒவ்வொரு இருபதாண்டுகளுக்கு ஒருமுறை சாசனச் சட்டங்களை கிழக்கிந்திய கம்பெனியின் சாசனத்தை நீட்டிக்க வகை செய்தது.
- ❖ கல்விக்கு ஒரு இலட்சம் நிதியாக வழங்கப்பட்டது.

**சாசனச் சட்டம் (1833):**

- ❖ தலைமை ஆளுநரின் கவுன்சில் கூட்டங்களை சட்டமியற்றுவதற்கான கூட்டங்கள் என்றும், நிர்வாகக்

கூட்டங்கள் என்றும் பிரித்துப் பார்க்க வகை செய்தது.

1. அனைத்து சிவில், ராணுவ அதிகாரங்களைக் கட்டுப்படுத்தி, கண்காணிக்கிற அதிகாரம் தலைமை ஆளுநரின் கவுன்சிலுக்கு அளிக்கப்பட்டது.
2. கூடுதலாக சட்ட உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டார். **(மெக்காலே)**
3. மைய அரசு வலிமை உடையதாகிறது. மாகாணங்கள் தங்களுக்கென சட்டமியற்றிக் கொள்ளும் உரிமைகள் இழந்தன.

**சாசனச் சட்டம் (1853):**

1. சட்டமியற்றும் பணிக்காக தலைமை ஆளுநரின் கவுன்சிலில் மேலும் ஆறு உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டனர்.
2. கவுன்சிலின் சட்டமியற்றும் பணியும், நிர்வாகப் பணியும் திட்டவட்டமாக வரையறுக்கப்பட்டன.
3. அரசுப் பணிகளுக்கு **போட்டித் தேர்வை** அறிமுகம் செய்தது.
4. முதன் முறையாக உள்நாட்டு மக்களுக்கு மைய சம பிரதிநிதித்துவம்.

**இந்திய அரசாங்கச் சட்டம் (1858):**

1. கிழக்கிந்திய கம்பெனியின் நிர்வாகத்தின் கீழ் இருந்த இந்திய ஆட்சிப் பகுதிகள் அனைத்தும் நேரிடையாக பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் வந்தன.
2. தலைமை ஆளுநரின் கவுன்சிலில் அலுவல் சாராத உறுப்பினர்களை அதாவது, இந்தியர்களை இணைத்துக் கொள்ள வழி செய்தது.
3. இந்தியாவின் தலைமை ஆளுநர் **"அரசுப் பிரதிநிதி"** என அழைக்கப்பட்டார். அதன்படி முதல் அரசப் பிரதிநிதி **வைசிராய் கானிங்பிரபு** ஆவார்.

## II. பிரிட்டிஷ் அரசின் கீழ் சட்டவளர்ச்சி

**இந்திய கவுன்சில் சட்டம் (1861):**

1. சட்டமியற்றல், பிரதிநிதித்துவ அமைப்புகளில் தொடக்கமாக இது அமைந்தது.
2. தலைமை ஆளுநரின் கவுன்சிலில் அலுவல் சாராத உறுப்பினர்களை அதாவது, இந்தியர்களை இணைத்துக் கொள்ள வழி வகை செய்தது.
3. பம்பாய், சென்னை மாகாணங்கள் முன்பு இழந்த சட்டமியற்றும் அதிகாரங்களைப் பெற்றன.

**இந்திய கவுன்சில் சட்டம் (1892):**

1. தலைமை ஆளுநரின் கவுன்சில், மாகாண கவுன்சில்களில் கூடுதல் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு அவை விரிவுபடுத்தப்பட்டன.

2. அலுவல் சாராத உறுப்பினர்களை நியமனம் செய்ய மறைமுகத் தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
3. கவுன்சில் உறுப்பினர்கள் வரவு-செலவு அறிக்கை பற்றி விவாதம் நடத்தவும், பொதுமக்கள் நலன் கருதி வினாக்கள் எழுப்பவும் அனுமதிக்கப்பட்டனர்.
4. பிரதிநிதித்துவ முறை, நிர்வாகத்துறை பாராளுமன்றத்திற்கு பொறுப்பாக இருத்தல் முதலிய கொள்கைகள் இச்சட்டத்தின் மூலம் செயல்வடிவம் பெறத் தொடங்கின.

**இந்திய கவுன்சில் சட்டம் (1909): (மிண்டோ-மார்லி சீர்திருத்தங்கள்)**

1. மத்திய, மாகாண கவுன்சில்கள் மேலும் விரிவுபடுத்தப்பட்டு, அவற்றின் செயல்பாடுகளும் விரிவுபடுத்தப்பட்டன.
2. தலைமை ஆளுநரின் கவுன்சில்களில், நியமன உறுப்பினர்கள் பெரும்பான்மையாகவும், மாகாண கவுன்சில்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் பெரும்பான்மையாகவும் இருந்தன.
3. சாதி அடிப்படையிலான பிரதிநிதித்துவ முறையும், இஸ்லாமியருக்குத் தனித்தொகுதி முறையும் அறிமுகம் செய்யப்பட்டன.
4. உறுப்பினர்கள் பட்ஜெட் மீது துணைக்கேள்விகள் எழுப்பவும், தீர்மானங்கள் கொண்டு வரவும் அனுமதி அளிக்கப்பட்டனர்.

**இந்திய அரசாங்கச் சட்டம் (1919): (மாண்டேகு செம்ஸ் போர்டு)**

1. மத்தியில் இருந்த சட்டமியற்றும் கவுன்சிலுக்குப் பதிலாக மாகாணங்களின் அவை (மேலவை), சட்டமன்றப் பேரவை (கீழவை) என்ற **ஈரடுக்கு முறை** உருவாக்கப்பட்டது.
2. இரு அவைகளிலும் தேர்ந்தெடுக்கப்-பட்ட உறுப்பினர்கள் பெரும்பான்மை பெற்றனர்.
3. அரசாங்கத்தின் பணிகள் வரையறுக்கப்பட்டு, மைய அரசுப் பணிகள், மாநில அரசுப் பணிகள் என பிரித்தறியப்பட்டன.
4. **மாகாணங்களில் இரட்டை ஆட்சி முறை** அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி மாகாண அரசின் பணிகள் ஆளுநரின் நிர்வாகத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட பணிகள் எனவும், சட்டமன்றத்திற்குப் பொறுப்புடைய அமைச்சரின் கீழ் மாற்றப்பட்ட பணிகள் எனவும் பகிர்ந்தளிக்கப்பட்டன.
5. முதன் முறை நேரடித் தேர்தல்முறை அறிமுகம் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் **1924** அமைக்கப்பட்டது.

**நவீன இறையாண்மை கோட்பாட்டின் தந்தை - ஜீன் போடின்**

**இந்திய அரசாங்கச் சட்டம் (1935):**


1. இந்தியாவில் இருந்த பிரிட்டீஷ் மாகாணங்களையும் இணைய விருப்பமுள்ள சுதேச அரசுகளையும் உள்ளடக்கிய **"அனைத்திந்திய கூட்டரசு"** அமைப்பு ஒன்று உருவாக வழிசெய்தது. எனினும், சுதேச அரசுகள் உடன்படாததால் கூட்டரசு உருவாகவில்லை.
2. இதுவரை பிரிட்டீஷ் இந்தியா நிர்வகிக்கப்பட்டு வந்த ஓரடுக்கு முறைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.
3. இச்சட்டத்தின்படி அரசாங்கத்தின் அதிகாரங்கள் மூன்று பட்டியல்களாகப் பிரிக்கப்பட்டன. அவை கூட்டாட்சி (மத்திய) பட்டியல், மாகாணப்பட்டியல் மற்றும் பொதுப்பட்டியல் என்பனவாகும்.
4. மாகாண அரசுகள், மாகாணப் பட்டியலில் உள்ள பணிகளில் மத்தியக் கட்டுப்பாடு ஏதுமின்றி நிர்வாகம் மற்றும் சட்டமியற்றும் பணிகளை மேற்கொள்ளக் கூடிய தனியொரு சட்டப்பூர்வ அமைப்பாக உருப்பெற்றன.
5. **மத்திய அரசாங்கத்தில் இரட்டை ஆட்சி முறை** கொண்டுவரப்பட்டது. ஒதுக்கப்பட்ட துறைகள் தலைமை ஆளுநர் மற்றும் அவரது நிர்வாகக் குழுவின் கீழும், மாற்றப்பட்ட துறைகள் அமைச்சரவையின் பொறுப்பிலும் விடப்பட்டன.
6. மாகாணங்களில் இரட்டையாட்சி முறை ஒழிக்கப்பட்டு **மாகாண சுயாட்சி** அறிமுகப்படுத்தப்பட்டது.
7. மாகாண அரசாங்கம் தேர்ந்தெடுக்கப் -பட்ட அமைச்சர்களின் பொறுப்பில் விடப்பட்டது. அமைச்சரவை சட்டமன்றத்திற்கு கூட்டுப்பொறுப்பு உடையதாகும்.
8. ஆளுநர் நிர்வாகப் குழுவின் தலைவராக இருப்பார். அவர் அமைச்சரவையின் ஆலோசனைப்படி செயல்படுவார் என விதிமுறைகள் செய்யப்பட்டன.
9. வங்காளம், சென்னை, பம்பாய், ஐக்கிய மாகாணம், பீகார் மற்றும் அஸ்ஸாம் மாகாணங்கள் இரண்டு அவைகளைக் கொண்ட சட்டமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.
10. ஒரு தலைமை நீதிபதி மற்றும் ஆறு நீதிபதிகளைக் கொண்ட கூட்டாட்சி நீதிமன்றம் டெல்லியில் நிறுவப்பட்டது.

**இந்திய விடுதலைச் சட்டம் : (1947)**

1. இந்தியா, பாகிஸ்தான் என இரண்டு குடியேற்ற நாடுகளை (டொமினியன்) உருவாக்க **1947 ஆகஸ்ட் 15** ஆம் தேதி நாள் குறிக்கப்பட்டது.
5. இந்தியாவில் இருந்த பிரிட்டிஷ் பேரரசியின் பொறுப்புகளும், இந்தியச் சுதேச அரசுகள் மீதான மேலாதிக்கம்

1947 ஆகஸ்ட் 15 தேதியிலிருந்து காலாவதியாகிவிடும்.

2. இரண்டு டொமினியன்களில் ஏதேனும் ஒன்றில் சுதேச அரசுகள் இணைந்து கொள்ளலாம். இரண்டு டொமினியன் -களுக்கும் தனித்தனியாக இரண்டு கவர்னர் ஜெனரல்களை பிரிட்டிஷ் பேரரசி நியமிப்பார்.
3. இரண்டு டொமினியன்களுக்கும் தனித்தனியாக சட்டமன்றங்கள் இருக்கும். பிரிட்டிஷ் நாடாளுமன்றத் -தின் தலையீடு இன்றிச் சட்டமியற்றும் முழு அதிகாரம் அவற்றுக்கு உண்டு.
4. டொமினியன்களை ஆட்சிபுரிவதற் -கான தற்காலிக ஏற்பாடாக, இரண்டு டொமினியன்களின் அரசியல் நிர்ணய சபைகளுக்கும் டொமினியன் நாடாளுமன்றத்திற்கான அந்தஸ்து அளிக்கப்பட்டது.
5. பஞ்சாப், வங்காளம் ஆகிய மாகாணங்களின் எல்லைகளை வரையறுப்பதற்கு எல்லை ஆணையம் ஏற்படுத்தப்படுமென அறிவிக்கப்பட்டது.
6. இந்தியச் சுதந்திர சட்டம் 1947யை முழுமையாக அமல்படுத்துவதற்குத் தேவையான விஷயங்கள் குறித்து தற்காலிக ஆணைகள் பிறப்பிக்க கவர்னர் ஜெனரலுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.



6. இச்சட்டம் மத்தியிலும், மாகாணங்களிலும் சட்டமன்றங் -களுக்குப் பொறுப்புள்ள அரசாங்கங் -களை ஏற்படுத்தியது.
7. இந்திய விவகாரங்களுக்கான அமைச்சரின் பணிகள், இந்தியாவின் முப்படைகள் ஆகியவற்றுக்கான நிபந்தனைகளையும் பிரிட்டிஷ் இராணுவம், கடற்படை, வான்படை ஆகியவற்றின் மீதான பிரிட்டிஷ் பேரரசியின் அதிகார வரம்புகளையும் அச்சட்டம் வரையறுத்தது.

## இந்திய அரசியலமைப்பு உருவாக்கம்

- இந்தியாவில் கம்யூனிசிய இயக்கத்தின் முன்னோடியான M.N. ராய் 1934 ஆம் ஆண்டு இந்தியர்களுக்கென அரசியல் சட்டம் உருவாக வேண்டும் என கருதினார்.
- பின்னர் கேபினெட் தூதுக்குழுவின் பரிந்துரைப்படி, இந்திய அரசியலமைப்பு குழு **16.05.1946**ல் அமைக்கப்பட்டது.

**கேபினேட் தூதுக்குழுவின் உறுப்பினர்கள்**

1. பெத்திக் லாரன்ஸ்
2. சர்.ஸ்டாப்போர்டு கிரிப்ஸ்
3. ஏ.வி. அலெக்ஸாண்டர்

- அரசியல் அமைப்பு குழுக்களுக்கான தேர்தலில் **208** காங்கிரஸ் உறுப்பினர்களும், **73** முஸ்லீம் லீக் உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- அரசியலமைப்பு குழுவின் மொத்த உறுப்பினர்கள் - **389 பேர்** (இதில் 292 பேர் தேர்தல் மூலமும், 93 பேர் நியமனம் மூலமும், 4 பேர் தலைமை கமிஷனர் பதவியிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- இந்திய அரசியல் நிர்ணய சபை **13 குழுக்களை** அமைத்தது.
- தோராயமான வரைவு **எம்.என்.ராய்** அவர்களால் தயாரிக்கப்பட்டது
- இந்திய சுதந்திரச் சட்டம் இங்கிலாந்து பாராளுமன்றத்தில் **18 ஜூலை 1947ல்** நிறைவேற்றப்பட்டது.
- இந்திய அரசியலமைப்பு சட்டம் நடைமுறைக்கு வரும்வரை 1935 ம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டம் நடைமுறையில் இருந்தது.
- நேருவைப் பிரதமராகக் கொண்ட இடைக்கால அரசு **1946** நிறுவப்பட்டது.
- இந்திய அரசியலமைப்பின் **முதல் கூட்டம் 9 டிசம்பர் 1946**ல் டெல்லியில் நடைபெற்றது. அரசியல் அமைப்பு குழுவின் தற்காலிக தலைவராக **டாக்டர். சச்சிதானந்த சின்ஹா** தேர்வு செய்யப்பட்டார்.
- பின்னர்,11 **டிசம்பர் 1946ல் டாக்டர். இராஜேந்திரபிரசாத்** அவர்கள் நிரந்தர தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.



டாக்டர். பாபு இராஜேந்திர பிரசாத்

- 1947 ஆகஸ்டு 29-ம் நாள் வரைவுக் குழுவின் தலைவராக டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் நியமனம் செய்யப்பட்டார்.
- **13 டிசம்பர் 1946ல் நேரு** அவர்கள் அரசியலமைப்பின் **முகப்புரையை** வழங்கினார்.
- இதில் இந்திய அரசியலமைப்பின் நோக்கம் மற்றும் குறிக்கோள்கள் இடம்பெற்றிருந்தது.
- இந்திய அரசியலமைப்பை உருவாக்க மொத்தம் **22 குழுக்கள்** இருந்தன.

| மாகாண அரசியலமைப்புக் குழு தலைவர் | சர்தார் வல்லபாய் படேல் |
|---|---|
| **அடிப்படை உரிமைகள் மற்றும் சிறுபான்மையினர் குழு தலைவர்** | சர்தார் வல்லபாய் படேல் |
| **கொடிக்குழு தலைவர்** | ஜே.பி. கிருபாளனி |
| **மைய அரசின் அதிகாரம் குறித்த குழு தலைவர்** | ஜவஹர்லால் நேரு |
| **மாநில அரசுகளுடன் பேச்சு வார்த்தை குழு** | டாக்டர். ராஜேந்திர பிரசாத் |
| **மைய அரசின் அரசியலமைப்புக் குழு** | ஜவஹர்லால் நேரு |
| **வகைப்படுத்தும் குழு** | டாக்டர். ராஜேந்திர பிரசாத் |

- வரைவுக்குழு **29 ஆகஸ்டு 1947** ல் டாக்டர். அம்பேத்கர் தலைமையில் அமைக்கப்பட்டது.
- இந்திய அரசியலமைப்பின் சிற்பி என அழைக்கப்படுபவர் - **டாக்டர். பி. ஆர். அம்பேத்கர்**
- இந்திய அரசியலமைப்பு குழுவின் சட்ட ஆலோசகராக இருந்தவர் - **பி. என். ராவ்**

**வரைவுக்குழுவில் இருந்த மற்ற உறுப்பினர்கள்:**

- P. அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர்
- N.கோபால்சாமி ஐயங்கார்,
- டாக்டர் K.M. முன்ஷி
- சையது முகமது சாதுல்லா
- B.L.மிட்டர் (என்.மாதவராவ்)
- D.P. கைத்தான் (டி.டி. கிருஷ்ணமாச்சாரி)

- ஆரசிய மைப்பு குழு இந்திய அரசியல் அமைப்பை உருவாக்க **2 ஆண்டுகள் 11 மாதங்கள் 18 நாட்கள்** தேவைப்பட்டது.



டாக்டர். பி.ஆர். அம்பேத்கார்

- இந்திய அரசியல் அமைப்பு குழு உறுப்பினர்கள் 284 பேர் கையொப்பமிட்டு **26 நவம்பர் 1949** ல் அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- இந்திய அரசியலமைப்பு ஏற்றுக் -கொண்ட பொழுது குடியுரிமை, பாராளுமன்றம், தேர்தல்கள் ஆகியன நடைமுறைக்கு வந்தது.

- ❖ அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்ட -போது அதில் 8 அட்டவணைகள், 22 பகுதிகள், **395** ஷரத்துகள் இருந்தன. தற்போது 12-அட்டவணைகள், **465** ஷரத்துக்கள் 25 பகுதிகள் உள்ளது.
- ❖ 1930 ல் ஜனவரி 26 ம் நாள் பூரண சுயராஜ்ஜிய தினமாக அனுசரிக்கப் -பட்டு தொடர்ந்து அந்நாளை கொண்டாடி வந்ததால், 26 ஜனவரி 1950 இந்திய அரசியலமைப்பு சட்டம் நடைமுறைக்கு வந்த நாளாக கொண்டாடுகிறோம்.
- ❖ அரசியல் நிர்ணய சபையில் கலந்து கொள்ளாத முக்கிய தலைவர்கள் **மகாத்மா காந்தி, முகமது அலி ஜின்னா**
- ❖ அரசியல் நிர்ணய சபை உருவாக்கும் போது சட்டமன்றத் தலைவராக இருந்தவர் **ஜி.வி. மாவ்லங்கர்.**

**அரசியலமைப்பு நிர்ணய சபை :**

- ❖ பொதுவாக ஓர் இறையாண்மை மக்களாட்சி நாட்டில் அரசியலமைப்பை உருவாக்கும் பணியை, அந்நாட்டு மக்களுக்கு பிரதிநிதிகள் அடங்கிய ஓர் அமைப்பே மேற்கொள்ளும், அரசியலமைப்பை இயற்றி ஏற்றுக் கொள்வதற்காக தேர்ந்தெடுக்கப்படும், அத்தகைய அமைப்பிற்கு அரசியலமைப்பு நிர்ணய சபை என்று பெயர்.
- ❖ அரசியலமைப்பு நிர்ணய சபை என்ற கருத்து இந்தியாவின் தேசிய இயக்க வளர்ச்சியுடன் நீண்ட தொடர்புடைய ஒன்றாகும்.
- ❖ இந்திய மக்கள் தமக்குத்தாமே ஓர் அரசியலமைப்பை இயற்றிக் கொள்வதற்காக அரசியல் நிர்ணய சபை ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற கருத்து 1919 ஆம் ஆண்டு இந்திய அரசாங்க சட்டத்தின் வரைவிலேயே இருந்தது.
- ❖ **1928 மே 19ஆம்** தேதி பம்பாயில் நடைபெற்ற அனைத்துக் கட்சி மாநாடு இந்திய அரசியலமைப்பின் கோட்பாடுகளை வரையறுப்பதற்காக மோதிலால் நேருவின் தலைமையில் ஒரு குழுவை அமைத்தது.
- ❖ அக்குழு அளித்த ”நேரு அறிக்கை” இந்தியாவிற்கான முழு நிறைவான அரசியலமைப்பு ஒன்றை இயற்ற இந்தியர்கள் மேற்கொண்ட முதல் முயற்சியாகும்.
- ❖ 1936 ஆம் ஆண்டின் லக்னோ காங்கிரஸ் மாநாட்டில் வெளியிலிருந்து திணிக்கப்படும் எந்த விதமான அரசியலமைப்பினையும் ஏற்க முடியாது எனவும், வயது வந்தோர் வாக்குரிமை மூலம் தேர்ந்தெடுக்கப்படும் அரசியல் நிர்ணய சபையால் உருவாக்கப்படும்

**குடியரசு என்ற நூலை எழுதியவர் - பிளோட்டோ**

அரசியலமைப்பினையே ஏற்க முடியும் எனவும் தீர்மானம் நிறைவேற்றியது.

- ❖ 1940ஆம் ஆண்டு முதன் முறையாக அரசியல் நிர்ணய சபைக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- ❖ அதன் பின்னர் **கிரிப்ஸ் தூதுக்குழு (1942)**, புதிய அரசியலமைப்பை உருவாக்கும் பணி முற்றிலும் இந்தியர்கள் வசம் விடப்படும் என்றும், அரசியல் நிர்ணய சபையால் வரையப்படும் அரசியலமைப்பை பிரிட்டிஷ் அரசு ஏற்றுக் கொள்ளும் என்று அறிவித்தது.
- ❖ இறுதியாக 1946 ஆம் ஆண்டு மார்ச் 15ல் இங்கிலாந்து பிரதமர் அட்லியின் அறிவிப்பை தொடர்ந்து, அமைச்சரவைத் தூதுக்குழுவின் திட்டத்தின் அடிப்படையில் இந்திய விடுதலைச் சட்டம் நடைமுறைக்கு வரும் வரையில் இந்திய அரசியலமைப்பு நிர்ணய சபை இறையாண்மையைப் பெற்றிருக்க -வில்லை.
- ❖ விடுதலைக்குப் பின்னரே இறையா -ண்மையுடையதாக மாறிவிட்டது.
- ❖ இந்தியா விடுதலை அடைந்தபோது அதற்கென அரசியலமைப்பு நடைமுறைக்கு வரும்வரை பிரிட்டிஷ் பாராளுமன்றம் இயற்றிய 1935 ஆம் ஆண்டின் இந்திய அரசாங்க சட்டத்தின் கீழ் ஆட்சி செய்யப்பட்டது.

**அரசியலமைப்பு நிர்ணய சபையின் பிறபணிகள் :**

- ❖ அரசியலமைப்பு நிர்ணய சபையானது, அரசியலமைப்பை உருவாக்கியது தவிர, பிற பணிகளையும் ஆற்றியது. அவையாவன :

1. காமன்வெல்த் அமைப்பில் இந்தியா உறுப்பினராவதற்கு ஏற்பளிப்பு வழங்கியது **(மே 1949)**
2. இந்தியாவின் தேசியக் கொடியை அறிவித்தது **(ஜூலை 22, 1947)**
3. சுதந்திரம் பெறுவதற்கு மூன்று வாரகாலத்திற்கு முன்பே அங்கீகாரம் அளித்தது.
4. இந்தியாவின் தேசிய கீதத்தையும், தேசியப் பாடலையும் ஏற்றுக் கொண்டது. (ஜனவரி **24, 1950)**

- ❖ இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவராக டாக்டர். இராஜேந்திரப் பிரசாத் அவர்களைத் தேர்ந்தெடுத்தது. (ஜனவரி 24, 1950).

**இந்திய அரசியலமைப்பு வடிவமைப்புக் குழுவின் தலைவரான பி.ஆர். அம்பேத்கரின் கருத்திற்கிணங்க விதி 32 அரசியலமைப்பின் உயிரும் இதயமும் ஆகும்.**

**பல்வேறு நாடுகளின் அரசியல் அமைப்பு மூலங்கள்**

அவை,

| | |
|---|---|
| **அமெரிக்கா** | முகப்புரை<br>அடிப்படை உரிமைகள்<br>நீதிப் புணராய்வு<br>நீதிபதிகள் பதவி நீக்கம்<br>தனித்து இயங்கும் நீதிமன்றம் |
| **இங்கிலாந்து** | பாராளுமன்ற முறை,பிரதம மந்திரி,சட்டம் இயற்றும் முறை<br>சட்டத்தின் வழி ஆட்சி,ஒற்றைக் குடியுரிமை |
| **அயர்லாந்து** | அரசுக்கு வழிகாட்டும் நெறிமுறைகள்<br>குடியரசுத் தலைவரின் தேர்தல் முறை<br>இராஜ்ய சபைக்கு 12 உறுப்பினர் நியமனம் |
| **கனடா** | மத்தியில் வலிமையுடன் கூடிய கூட்டாட்சி முறை அதிகாரப் பகிர்வு மற்றும் மத்திய அரசிடம் எஞ்சிய அதிகாரங்கள் |
| **தென் ஆஃப்ரிக்கா** | சட்டதிருத்த முறை |
| **ரஷ்யா** | அடிப்படைக் கடமைகள் |
| **ஆஸ்திரேலியா** | பொதுப்பட்டியல்,மத்திய மாநில உறவுகள் |
| **ஜெர்மனி** | அவசரநிலை பிரகடனத்தின் போது அடிப்படை உரிமைகள் இடைநீக்கம் |
| **ஜப்பான்** | உச்ச நீதிமன்றத்தின் தோற்றமும், நடைமுறையும் |
| **இந்திய அரசியலமைப்பு சட்டம், 1935 (மூன்றில் இரண்டு பங்கு இதிலிருந்து எடுக்கப்பட்டது)** | கூட்டாட்சி முறை, ஆளுநர் பதவி,<br>நெருக்கடி கால நிலை |